மார்ச் 2020

விண்மீன் .காம்

# மூன்றாவது வார நடப்பு நிகழ்வுகள்

15 மார்ச் – 22 மார்ச்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

**1.அரசாங்கத்தின் நலவாழ்வு தொடர்புடைய திட்டங்களைப்பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களில், 'ஆரோக்ய மித்ரா'வை நியமிக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

அ. ஒடிசா

ஆ. ஆந்திர பிரதேசம்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. பீகார்

❖ உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், சமீபத்தில், அரசாங்கத்தின் நலவாழ்வு தொடர்பான திட்டங்கள் குறித்து மக்களுக்கு தெரிவிப்பதற்காக மாநிலத்தின் அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களிலும் தலா ஒரு, 'ஆரோக்கிய மித்ரா' நியமிக்கப்படுவதாக அறிவித்தார். தொழிற்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு பரிவர்த்தனைத் துறையின், 'கௌஷல் சத்ரங்' திட்டத்தையும் அவர் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம், மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

**2.இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, 2019-20 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான நடப்புக்கணக்கு பற்றாக்குறை (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தின் அடிப்படையில்) என்ன?**

**அ. 1% ☑**

ஆ. 2%

இ. 3%

ஈ. 4%

1%

❖ இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, நடப்புக்கணக்கு பற்றாக்குறையானது (Current Account Deficit) செப்டம்பர் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது டிசம்பர் காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2 சதவீதமாக உள்ளது.

❖ 2018-19ஆம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் மாதங்களில் 2.6 சதவீதமென இருந்த நடப்புக்கணக்கு பற்றாக்கு-றையை ஒப்பிடும்போது, 2019-20ஆம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அது 1 சதவீதமாகக்குறைந்துள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. 2019-20ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான மாதங்களில் $118.9 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்பட்ட வர்த்தக பற்றாக்குறை-யே இதற்குக் காரணமாக கூறப்படுகிறது.

**3.எந்தக் கனிமத்தை அகழ்ந்தெடுக்கும் தொழிலை, வணிகமயமாக்குவதை முன்மொழிகின்ற, "கனிம சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2020"ஐ மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது?**

அ. இரும்பு

**ஆ. நிலக்கரி ☑**

இ. செப்பு

ஈ. பாக்சைட்



❖ சுரங்க மற்றும் கனிம (மேம்பாடு & ஒழுங்குமுறை) சட்டம், 1957 மற்றும் நிலக்கரி சுரங்கங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம், 2015 ஆகியவற்றில் திருத்தங்களை முன்மொழியும், "கனிம சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2020"ஐ மாநிலங்களவை நிறைவேற்றியது. குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு இச்சட்டம் நடைமுறைக்கு வரும். இதன்மூலம், நிலக்கரி உற்பத்தி தொடர்பான ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாடு என அனைத்து வகையான நிறுவனங்களும் பங்கேற்க முடியும். இது நிறுவனங்களின், "குறிப்பிட்ட இறுதிப்பயன்பாட்டு விதி"யை அகற்றவும் முயற்சி செய்கிறது.

**4.இந்திய ரிசர்வ் வங்கியின் புனரமைப்புத் திட்டத்தின்படி, எந்த இந்திய நிறுவனம் ₹7250 கோடியை YES வங்கியில் செலுத்தவுள்ளது?**

அ. ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

**ஆ. பாரத ஸ்டேட் வங்கி ☑**

இ. HDFC வங்கி

ஈ. ICICI வங்கி

❖ திவால் நிலையிலிருக்கும் YES வங்கியை மீட்டெடுக்கும் பொருட்டு, பாரத ஸ்டேட் வங்கி (SBI) ₹7,250 கோடியை முதலீடு செய்வதற்கு அதன் மத்திய வாரிய செயற்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி மொத்த அளவில், SBI, YES வங்கியின் 725 கோடி பங்குகளை, ஒரு பங்கின்விலை ₹10 என்ற வீதத்தில் ₹7,250 கோடிக்கு வாங்கவுள்ளது. மொத்தமாக, YES வங்கியின் 49% பங்குகளை SBI வாங்கவுள்ளது.

**5.அதிபர் டொனால்ட் டிரம்ப், எந்த நாட்டைத் தாக்குவதைத்தடுக்கும் தீர்மானத்திற்கு, அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்தது?**

அ. ஈராக்

**ஆ. ஈரான் ☑**

இ. சூடான்

ஈ. லிபியா




❖ ஈரான் மீது போர்தொடுக்கும் நடவடிக்கையை எடுக்க, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்புக்கு கட்டுப்பாடு விதிக்கும் மசோதாவுக்கு அமெரிக்க காங்கிரஸ் ஒப்புதல் அளித்தது. இந்தத் தீர்மானத்தின்படி, காங்கிரஸின் வெளிப்படையான வாக்கெடுப்பு இல்லாமல் ஈரானுக்கு எதிராக எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.

❖ முன்னதாக, வட பாக்தாத்தில் உள்ள இராணுவத்தளத்தின் மீது ஏவப்பட்ட ஓர் ஏவுகணை, அமெரிக்க சிப்பாய், ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் மற்றும் ஒரு அமெரிக்க ஒப்பந்தக்காரரைக் கொன்றது. ஈராக்கின் பாக்தாத் வானூர்தி நிலையத்தில், ஈரானின் தலைமை இராணுவத்தளபதி குவாசிம் சுலைமானியைக்கொன்ற தாக்குதலுக்கு, 2020 ஜனவரியில் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

**6.வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எந்த நாட்டிடம் ஒப்படைப்பதற்காக, இந்திய கடற்படைக்கப்பலான ஷர்துல், அத்தியாவசிய உணவு மற்றும் நிவாரணப் பொருட்களைக் கொண்டுசென்றது?**



அ. மொரீஷியஸ்

**ஆ. மடகாஸ்கர் ☑**

இ. மலேசியா

ஈ. மாலத்தீவு

❖ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மடகாஸ்கருக்கு, இந்தியாவின் சார்பாக, 600 டன் அரிசி & நிவாரணப் பொருட்கள் கப்பலில் எடுத்துச்சென்று இந்திய கப்பற்படை அந்நாட்டு அதிகாரிகளிடம் வழங்கியது. இந்திய கடற்படைக் கப்பல் (INS) ஷர்துல், இந்திய அரசின் உத்தரவுப்படி 600 டன் அரிசியை எடுத்துச் சென்றது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான மடகாஸ்கரில் அண்மையில் புயல் வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது 'ஆபரேஷன் வெண்ணிலா' என்ற பெயரில் இந்திய கடற்படை உதவியது குறிப்பிடத்தக்கது.

**7.போதைமருந்து மோசடிகளில் ஈடுபட்டதற்காக, எந்த நாட்டின் தடகள சம்மேளனத்திற்கு $10 மில்லியன் அமெரிக்க டாலரை உலக தடகள ஆணையம் அபராதமாக விதித்தது?**

RusAthletics Russian Athletics

அ. சீனா

**ஆ. இரஷ்யா ☑**

இ. அமெரிக்கா

ஈ. ஆஸ்திரேலியா

❖ ஊக்கமருந்து எதிரான விதிகளை மீறியதற்காக, உலக தடகள ஆணையம், இரஷ்யாவின் தடகள சம்மேளனத்திற்கு (RusAF) $10 மில்லியன் அமெரிக்க டாலரை அபராதமாக விதித்தது. டோக்கியோ 2020 ஒலிம்பிக் மற்றும் பிற குறிப்பிட்ட சீனியர் நிலை போட்டிகளில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடுநிலை தடகள வீரர்களின் எண்ணிக்கையை, உலக தடகள ஆணையம், பத்தாக நிர்ணயித்துள்ளது. இருப்பினும், பன்னாட்டு நிகழ்வுகளில் போட்டியிடக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட நடுநிலை விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை எதுவும் கட்டுப்படுத்தப்படவில்லை.

**8.இந்திய மருத்துவக் கழகத்தின் உதவியுடன் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குளுக்கோமீட்டரின் பெயர் என்ன?**



அ. GlucoCheck

ஆ. GluCheck

இ. SugarCheck

**ஈ. SuCheck ☑**

❖ 'SuCheck' என்பது முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு மலிவான குளுகோமீட்டர் ஆகும். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இது, பன்னாட்டுத் தரத்தின்படி சரிபார்க்கப்பட்டதோடு மாறுபட்ட காலநிலைகளுக்கு ஏற்றதாகவும் உள்ளது.

- ❖ பரவாநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், பொதுமக்களிடையே நலமான பழக்கவழக்க –ங்களை அறிவுறுத்துவதற்குமாக, 'mDiabetes' என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**9.குற்ற பல்முகமை மையம் (Crime Multi Agency Centre – Cri–MAC) தொடர்புடைய அமைப்பு எது?**

அ. மத்திய புலனாய்வுப் பிரிவு

**ஆ. தேசிய குற்றப்பதிவு பணியகம் ☑**

இ. தேசிய விசாரணை முகமை

ஈ. போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம்

- ❖ தேசிய குற்றப்பதிவு பணியகம் தனது முப்பத்தைந்தாவது தொடக்க தினத்தை 2020 மார்ச் 12 அன்று கொண்டாடியது. இந்நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினரான மத்திய உள்துறை இணையமைச்சர் ஸ்ரீ நித்யானந்த் ராய் குற்ற பல்முகமை மையத்தை (Cri–MAC) தொடங்கிவைத்தார்.

- ❖ கொடூரமான குற்றங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு தொடர்பான பிற பிரச்சனைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கான மையந்தான் இது. இணையவெளிக் குற்றவிசாரணைதொடர்பான இ–கற்றல் சேவைகளுக்காக, தேசிய இணையவெளிக்குற்றம் குறித்த பயிற்சி மையத்தையும் (National Cybercrime Training Centre) அமைச்சர் தொடங்கிவைத்தார்.

**10.கிடங்கு வசதியை அமைப்பதற்காக ஒரு சிறப்பு பொருளாதார மண்டலத்துடன் கூட்டிணைந்த முதல் இந்திய வானூர்தி நிறுவனம் எது?**

அ. இண்டிகோ

**ஆ. ஸ்பைஸ்ஜெட் ☑**

இ. விஸ்டாரா

ஈ. ஜெட் ஏர்வேஸ்

- ❖ குருகிராமைச் சார்ந்த இந்திய வானூர்தி நிறுவனமான ஸ்பைஸ்ஜெட், அண்மையில், ஒரு கிடங்கு, விநியோகம் & வர்த்தக வசதியை அமைப்பதற்காக GMR Hyderabad Aviation SEZ Limited (**GHASL**) உடனான தனது கூட்டாண்மையை அறிவித்தது. **GAHSL** என்பது GMR ஹைதராபாத் பன்னாட்டு வானூர்தி நிலைய லிட்'க்கு (GHIAL) சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும். அதன் தொழிற்துறை பூங்காவில் இவ்வசதி அமைக்கப்படவுள்ளது. இந்த ஒப்பந்தம் நாட்டில் சரக்குப் போக்குவரத்துத் தொழிற் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- இந்தியாவிலேயே மீகநீளமான செஞ்சாந்து பாறை ஓவியங்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், ஜிஞ்சுப்பள்ளி அருகே, பணிகுண்டு பாறையின்கீழ் கண்டறியப்பட்டுள்ளன. இது ஓர் அரிய வகை பாறை ஓவியமாகும். 7 மீ., நீளத்துக்கு குழு நடனம் போன்று வளைந்து வளைந்து, செஞ்சாந்து ஓவியம் காணப்படுகிறது. இந்தச் செஞ்சாந்து ஓவியம், சுமார் 4500 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.
- 'நீராருங் கடலுடுத்த' என தொடங்கும், 'தமிழ்த்தாய் வாழ்த்து'ப்பாடல் தமிழ் மொழியை வாழ்த்தி வணக்கம் செலுத்தும் பாடலாகும். இந்தப்பாடல், 1970ஆம் ஆண்டு முதல் பாடப்பட்டு வருவதால், நம் இப்பாடலுக்கு பொன்விழா ஆண்டாக நடப்பாண்டு (2020) விளங்குகிறது. பேராசிரியர்.பெ.சுந்தரனார் எழுதி, கடந்த 1891ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட, 'மனோன்மணீயம்' என்னும் நாடகநூலில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.
- 'COVID–19' (கொரோனா) வைரஸை பொது சுகாதாரச் சட்டம், 1939இன்கீழ் தொற்றுநோய் பட்டியலில் சேர்த்து தமிழ்நாடு அரசின் அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்

**1. MEIS'ஐ (வாணிபச் சரக்குகள் ஏற்றுமதி ஊக்கமுகத்திட்டம்) மாற்றியமைப்பதற்காக அமைக்கப்பட்ட RoDTEP திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் புதிய, 'RoDTEP' திட்டத்தில் 'R' என்பது எதைக்குறிக்கிறது?**



அ. Reduction

**ஆ. Remission ☑**

இ. Reception

ஈ. Remuneration

- ஏற்றுமதி சரக்குகளுக்கான தீர்வைகள் அல்லது வரிகளை நீக்குவதற்கு (Remission of Duties or Taxes on Export Products – RoDTEP) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மதிப்பு கூட்டப்பட்ட வரி, நிலக்கரி வரி மற்றும் மின்சார தீர்வைகள் போன்ற வரி மற்றும் தீர்வைகளை ஏற்றுமதியாளர்கள் திருப்பிச்செலுத்துவதற்கான ஒரு திட்டந்தான் இது.
- ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காக, கடந்தாண்டில், RoDTEP திட்டத்தை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ₹50,000 கோடி மதிப்பில் அறிவித்தார். படிப்படியாக அகற்றப்படவுள்ள வாணிபச் சரக்குகள் ஏற்றுமதி ஊக்கமுகத்திட்டத்துக்குப்பதிலாக RoDTEP திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**2.இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் அதிகபட்ச கடன் வரம்பு எவ்வளவு?**




அ. அடுக்கு-1 மூலதனத்தின் 10%

**ஆ. அடுக்கு-1 மூலதனத்தின் 15% ☑**

இ. அடுக்கு-1 மூலதனத்தின் 20%

ஈ. அடுக்கு-1 மூலதனத்தின் 25%

- இந்திய ரிசர்வ் வங்கியானது நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான கடன் வாங்கும் தனிநபர் மற்றும் குழுவுக்கான வரம்பினை முறையே அடுக்கு I மூலதனத்தின் 15% மற்றும் 25% ஆக நிர்ணயித்துள்ளது. வரம்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் குறைப்பு என்பது பேரளவில் கடன்களினால் எழும் ஆற்றல்மிகு அபாயங்களைக் குறைக்கும்.
- தற்போதுள்ள வரம்புகள் (வங்கியின் மொத்த மூலதனத்தின் (அடுக்கு I & II மூலதனம்)) கடன் வாங்கும் தனிநபர்களுக்கு 15% எனவும் குழுவாக கடன்பெறுவோருக்கு 40% எனவும் உள்ளன. இந்தப் புதிய வரம்புகளை, வங்கிகள், வரும் 2023 மார்ச் 31ஆம் தேதிக்குள் அமல்படுத்தவேண்டும்.

**3.முகக்கவசம் (mask) மற்றும் கை தூய்மைப்படுத்தியை (sanitizer) எச்சட்டத்தின்கீழ் வைப்பதன்மூலம், அவற்றை அத்தியாவசியப்பொருட்களாக அரசாங்கம் அறிவித்தது?**



அ. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019

**ஆ. அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 ☑**

இ. தொற்றுநோய் சட்டம், 1897

ஈ. இந்திய தரநிர்ணயச் சட்டம், 2016

❖ கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவருவதையடுத்து, அதைத்தடுக்கவுதவும் கை தூய்மைப்படுத்தி முகக்கவசம், கையுறை ஆகியவற்றை அத்தியாவசியப்பொருட்கள் சட்டம், 1955இன்கீழ் கொண்டுவந்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வகைப்பொருட்களைப் பதுக்குவதோ, விலையை அளவுக்கு அதிகமாக உயர்த்தி அறிவிப்பதோ சட்டப்படி குற்றமாகும்.

❖ இந்தப்பொருட்களின் விற்பனையை மாநில அரசுகள் ஒழுங்குபடுத்துவது அத்தியாவசியம். வரும் ஜூன் 30 வரை இந்தப் பொருட்கள் அனைத்தும் அனைத்து மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

**4.ரிசர்வ் வங்கியானது வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் சொத்து புனரமைப்பு நிறுவனங்கள் ஆகியவற்றால் 'Ind AS'ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டது. 'Ind AS' என்பது எதைக்குறிக்கிறது?**




அ. Indian Accounting Standards ☑

ஆ. International Accounting Standards

இ. Indian Asset Standards

ஈ. International Asset Standards

❖ வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் சொத்து புனரமைப்பு நிறுவனங்கள், 2019–20ஆம் நிதியாண்டு முதல் நிதியியல் முடிவுகளை தயாரிக்கும்போது இந்திய கணக்கியல் தரநிலைகளை (Ind AS) செயல்படுத்துவதற்கான ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்டது.

❖ இந்திய கணக்கியல் தரநிலைகள் என்பது இந்தியாவிலுள்ள நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் தரமாகும். அவை, கணக்கியல் தர நிர்ணய வாரியத்தின் மேற்பார்வையின்கீழ் வழங்கப்ப–டுகின்றன. நமது தரங்களை சர்வதேச நிதியியல் அறிக்கை தரநிலைகளுக்கு இணையாக கொண்டுவருவதே Ind As'இன் நோக்கமாகும்.

**5.பசுமை நெடுஞ்சாலை திட்டத்தில், நெடுஞ்சாலையோர மரநடுவுக்கும் அதன் பராமரிப்புக்கும் மொத்த திட்ட செலவில் எத்தனை சதவீதம் செலவிடப்படுகிறது?**



அ. 0.5% ஆ. 1% ☑

இ. 1.5% ஈ. 2%

❖ ₹7,660 கோடி செலவில் 780 கி.மீ நீள பசுமை தேசிய நெடுஞ்சாலை திட்டத்தை நிர்மாணிப்பதற்கு, அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

❖ ஹிமாச்சல பிரதேசம், இராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் ஆந்திரா ஆகிய நான்கு மாநிலங்களில் பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதும் இதில் அடங்கும். சமூகத்தின் பங்களிப்புடன் நெடுஞ்சாலை வழித்தடங்களை பசுமையாக்குவதை ஊக்குவிப்பதே, "பசுமை நெடுஞ்சாலைகள் (மர நடவு, அழகுபடுத்துதல் & பராமரிப்பு) கொள்கை"யின் நோக்கம். அனைத்து நெடுஞ்சாலை திட்டங்களின் மொத்த திட்டசெலவில் 1% நெடுஞ்சாலையோர மரநடவுக்கும் அதன் பராமரிப்புக்கும் என ஒதுக்கப்படும்.

**6. YES வங்கியின் புனரமைப்புத் திட்டத்தின்படி, வங்கியின் புதிய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் என்ன?**

அ. ₹2,200 கோடி

ஆ. ₹4,200 கோடி

**இ. ₹6,200 கோடி ☑**

ஈ. ₹8,200 கோடி

❖ YES வங்கிக்கு நிதியுதவி வழங்குவதற்காக, ரிசர்வ் வங்கி முன்மொழிந்த புனரமைப்புத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. YES வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் திறன் ₹6,200 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் அறிவித்தார். இந்தத் திட்டத்தின்கீழ், SBI, YES வங்கியில், ₹7,250 கோடியை செலுத்தி அதன் 49% பங்குகளை வாங்கவுள்ளது.

❖ ICICI வங்கி ₹1,000 கோடியும், HDFC வங்கி ₹1,000 கோடியும், ஆக்சிஸ் வங்கி ₹600 கோடியும் முதலீடு செய்யும். பெடரல் வங்கி & பந்தன் வங்கி தலா ₹300 கோடி முதலீடு செய்யும். பஞ்சாப் தேசிய வங்கியின் முன்னாள் நிர்வாகப் பணிகளில் ஈடுபடாத தலைவர் சுனில் மேத்தா, YES வங்கியின் நிர்வாகப் பணிகளில் ஈடுபடாத தலைவராக நியமிக்கப்படுகிறார்.

**7.நலவாழ்வு ஆலோசனைகளை அமல்படுத்துவதற்காக, தொற்றுநோய் தடுப்புச்சட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?**

**அ. 1897 ☑**

ஆ. 1921

இ. 1947

ஈ. 1987




❖ இந்தியாவின் அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தொற்றுநோய் தடுப்புச் சட்டம், 1897இன் பிரிவு 2இன் விதிகளைச் செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு, மாநில அரசுகள் / யூனியன் பிரதேசங்களுக்கு சிறப்பு நடவடிக்கைகளை எடுக்கவும், எந்தவொரு நோய்த் தொற்றையும் கட்டுப்படுத்துவதற்கு விதிமுறைகளை வகுக்கவும் அதிகாரம் அளிக்கிறது.

❖ 123 ஆண்டுகள் பழமையான இந்தச்சட்டத்தில், மக்கள் அல்லது அயல்நாட்டிலிருந்து வரும் எந்தவொரு கப்பலையும் தடுத்துவைப்பதும் அடங்கும். குஜராத்தில் உள்ள ஒரு கிராமத்தில், காலரா பரவுவதைக்

கட்டுப்படுத்துவதற்காக, இந்தச் சட்டம், கடந்த 2018ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### 8. 'பூமி ராஷி' தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ. வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம்

**இ. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ☑**

ஈ. புவி அறிவியல் அமைச்சகம்

- 'பூமி ராஷி' என்பது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால், கடந்த 2018 மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்ட ஒரு நிலம் கையகப்படுத்தும் வலைதளம் ஆகும். பெரும்பாலான நேரங்களில் செயலாக்க நேரத்தை 2 வாரங்களுக்கும் குறைவாகக்குறைத்ததன் மூலம், தேசிய நெடுஞ்சாலைகளு –க்கான நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை இந்தத்தளம் கணிசமாக துரிதப்படுத்தியுள்ளதாக அவ்வமைச்சகம் அண்மையில் அறிவித்தது.

- நிலம் கையகப்படுத்தும் செயல்முறையானது பொது நிதி மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைக்க –ப்பட்டுள்ளதால் பிழை இல்லாததாகவும் வெளிப்படையானதாகவும் உள்ளது.

### 9.அம்பேத்கர் இல்ல நினைவுச்சின்னம் மூடப்படுவதை எதிர்த்து இந்தியா மேல்முறையீடு செய்துள்ளது. இது எந்த நாட்டில் அமைந்துள்ளது?

அ. பிரான்ஸ்

**ஆ. பிரிட்டன் ☑**



இ. இரஷ்யா

ஈ. ஜப்பான்

- அம்பேத்கர் இல்ல நினைவுச்சின்னம் மூடப்பட்டதற்கு எதிராக, பிரிட்டன் அரசாங்கத்திடம், இந்தியா முறையிட்டது. அண்மையில், இங்கிலாந்து இந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டு, வடக்கு லண்டனில் உள்ள அந்நினைவுச்சின்னம் பார்வையாளர்களுக்காக திறந்திருக்குமென அறிவித்தது.

- முன்னதாக, குடியிருப்புப் பகுதிக்கான திட்டமிடல் விதிமுறைகளை அந்நினைவுச்சின்னம் மீறியதால் அது மூடப்பட்டது. Dr.பாபாசாகேப் அம்பேத்கர், 1921–22இல் கேம்டனில் உள்ள லண்டன் பொருளாதாரப் பள்ளியில் பயின்றபோது அங்கு வாழ்ந்தார். இந்த வீட்டை, மகாராஷ்டிரா மாநில அரசு வாங்கி, அதனை ஒரு நினைவுச்சின்னமாக புதுப்பித்தது.

**10.ஜெய்தேவ் உனத்கட் தொடர்புடைய பிராந்திய கிரிக்கெட் அணி எது?**



அ. வங்க கிரிக்கெட் அணி

**ஆ. சௌராஷ்டிரா கிரிக்கெட் அணி ☑**

இ. மும்பை கிரிக்கெட் அணி

ஈ. கர்நாடக கிரிக்கெட் அணி

❖ ஜெய்தேவ் உனத்கட் தலைமையிலான சௌராஷ்டிரா கிரிக்கெட் அணி, அண்மையில் தனது முதல் ரஞ்சிக்கோப்பையை வென்றது. ராஜ்கோட்டின் சௌராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில், ஐந்தாம் மற்றும் இறுதிநாளில் நடந்த இறுதிப்போட்டியில், வங்க கிரிக்கெட் அணியை வீழ்த்தி சௌராஷ்டிரா கிரிக்கெட் அணி கோப்பையை வென்றது. அரையிறுதிப்போட்டி மற்றும் இறுதிப்போட்டி இரண்டிலும் சதமடித்த அர்பிதா வாசாவாடா, சிராக் ஜானி மற்றும் ஷெல்டன் ஜாக்சன் உள்ளிட்ட பல சிறந்த வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றிருந்தனர்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ கொரோனா வைரஸ் அறிகுறி உள்ள இரத்த மாதிரிகள் ஆய்வுசெய்வதற்கான ஆய்வகம் சென்னையில் உள்ள கிங்ஸ் மருத்துவமனை மற்றும் தேனி மருத்துவக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், திருவாரூர் மருத்துவக்கல்லூரியில் கொரோனா வைரஸ் அறிகுறி உள்ள ரத்த மாதிரிகளை ஆய்வுசெய்வதற்கான ஆய்வகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

❖ மதுராந்தகத்தை அடுத்த அச்சிறுப்பாக்கத்தில் ₹1 கோடி மதிப்பில் இரட்டைமலை சீனிவாசனின் நினைவுமண்டபம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மதுராந்தகம் அருகேயுள்ள கோழியாளம் கிராமத்தைச் சார்ந்தவர் இரட்டைமலை சீனிவாசன். இவரது நினைவாக, ₹1 கோடி மதிப்பில் நினைவுமண்டபம் கட்டப்படுமென 2018–19ஆம் நிதியாண்டில் சட்டப்பேரவைக்கூட்டத் தொடரில் 110ஆம் விதியின்கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. "கங்கா அமந்திரன் அபியான்" திட்டத்தை நடத்தும் அமைப்பு எது?**

**அ. தேசிய தூய்மை கங்கை திட்டம் ☑**

ஆ. கங்கை வெள்ள கட்டுப்பாட்டு திட்டம்

இ. தேசிய நீர் மேம்பாட்டு நிறுவனம்

ஈ. மத்திய நீர் ஆணையம்

❖ நீர்வளத்துறை, ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கையாறு புனரமைப்பு–ஜல் சக்தி அமைச்சகத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தேசிய தூய்மை கங்கை திட்டமானது அதன் படகுப்பயணத்திட்டத்தை, "கங்கை அமந்திரன் அபியான்" என்ற பெயரில் ஏற்பாடு செய்தது. தேவபிரயாக் (உத்தரகண்ட்) முதல் கங்காசாகர் (மேற்கு வங்கம்) வரையிலும் இப்படகுப்பயணத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத்திட்டம் சமீபத்தில் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

**2.சாமேலி தேவி ஜைன் விருது என்பது எந்தத் துறைசார்ந்தோருக்கு வழங்கப்படும் விருதாகும்?**



அ. அரசியல்

ஆ. விளையாட்டு

**இ. இதழியல் ☑**

ஈ. சமூக சேவை

❖ சாமேலி தேவி ஜைன் விருது என்பது ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு விருது ஆகும். இது, 1981ஆம் ஆண்டு முதல் இதழியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. சாமேலி தேவி ஜைன் ஒரு புகழ்பெற்ற விடுதலைப் போராளியும் சமூக சீர்திருத்தவாதியுமாவார். இந்த ஆண்டு, சிறந்த பெண் இதழாளருக்கான விருது, 'தி வயர்' இதழைச்சார்ந்த அர்பா கானும் ஷெர்வானி என்பவருக்கும், ரோகினி மோகன் என்பவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

❖ காஷ்மீர் மற்றும் உத்தரபிரதேசத்தில் பணியாற்றியதற்காக அர்பா கானும் தேர்வுசெய்யப்பட்டார். அதே நேரத்தில், அஸ்ஸாமில் NRC குறித்த புலனாய்வு தகவலுக்காக ரோகினி மோகன் தேர்வுசெய்யப்பட்டார்.

**3.கலவரக்காரர்களினால் பொதுச்சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடுகளைப்பெற முற்படும் அவசர ஆணையை அண்மையில் நிறைவேற்றிய மாநில அமைச்சரவை எது?**



அ. மகாராஷ்டிரா

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. சத்தீஸ்கர்


ஈ. குஜராத்

❖ வன்முறை போராட்டங்களின்போது பொதுச்சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடுகளைப் பெறுவதற்காக, உத்தரபிரதேச மாநில அமைச்சரவை, அண்மையில், "பொதுச்சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடுகளைப் பெறுவது – 2020" என்ற அவசர ஆணையை நிறைவேற்றியது.

❖ முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவு, பொதுச்சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களைத் தடுப்பதை நோக்கத்தைக் கொண்டுள்ளது. வன்முறையில் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடுகளை கலகக்காரர்களிடமிருந்தே பெறுவதற்கு இந்த அவசர ஆணை வழிவகுக்கிறது. குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிராக அம்மாநிலத்தில் பல வன்முறை போராட்டங்கள் நடைபெற்றன; அதன் பின்னணியில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

**4.பல்வேறு அரசாங்கப் பணிகளுக்காக, வரும் 2021ஆம் ஆண்டு முதல் பின்பற்றப்படவுள்ள புதிய ஆட்சேர்ப்பு முறையின் பின்னணியில், 'CET' என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Common Eligibility Test ☑



ஆ. Common Entrance Test

இ. Central Eligibility Test

ஈ. Central Entrance Test

❖ பணியாளர்கள், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதியத்துறை அமைச்சரான ஜிதேந்திர சிங்கின் அன்மியி அறிவிப்பின்படி, இரயில்வே, வங்கிகள் மற்றும் மத்திய அரசுப்பணிகளின், கீழ்மட்டங்களில் உள்ள பணிகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு, வரும் 2021ஆம் ஆண்டு முதல் பொதுத் தகுதித் தேர்வு இருக்கும். இந்த இணையவழித் தேர்வை நடத்துவதற்காக, மத்திய அரசானது ஒரு தன்னாட்சி மிக்க தேசிய ஆட்சேர்ப்பு முகமையை அமைக்கவுள்ளது.

❖ பணியாளர்கள் தேர்வாணையம் (SSC), இரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB) & வங்கிப்பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) ஆகியவை நடத்திய முதல்நிலை தேர்வுகளுக்கு மாற்றாக இப்புதிய பொதுத் தகுதித் தேர்வு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.அண்மையில் காலமான சாகித்திய அகாடமி விருதுவென்ற புதுசேரி இராமச்சந்திரன், எந்த மொழிசார் கவிஞரும் அறிஞருமானவர்?**

அ. தமிழ்



ஆ. மலையாளம் ☑

இ. கன்னடம்

ஈ. தெலுங்கு

❖ புகழ்பெற்ற கவிஞரும் மலையாள மொழி அறிஞருமான புதுசேரி இராமச்சந்திரன் (91) அண்மையில் காலமானார். கடந்த 2013ஆம் ஆண்டில், மலையாளத்தை மத்திய அரசால் செம்மொழியாக அங்கீகரிக்க வைப்பதில் அவர் ஒரு முக்கிய பங்கைக்கொண்டிருந்தார். கடந்த 2015ஆம் ஆண்டில் எழுத்தச்சன் விருது மற்றும் கேரள சாகித்திய அகாடமி விருது உட்பட பல மதிப்புமிக்க விருதுகளை ராமச்சந்திரன் வென்றுள்ளார். கேரள கம்யூனிஸ்ட் இயக்கத்துடனும் அவர் தொடர்புகொண்டிருந்தார்.

**6. 'அக்ஷய் உர்ஜா வலைதளம்' தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

அ. மின்சார அமைச்சகம்

ஆ. வேளாண்மை மற்றும் உழவர்நல அமைச்சகம்

**இ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

ஈ. கனரக தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகம்

❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது அண்மையில் தனது புதிய வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. இது, புதிய திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்த தகவல்களை சிறந்த முறையில் தொகுத்து காட்சிப்படுத்தியுள்ளது. புதிதாக தொடங்கப்பட்ட இவ்வலைத்தளம், சிறந்த பயனர் இடைமுகத் –தையும் பல்வேறு சாதனங்களிலிருந்து சிறந்த அணுகலையும் வழங்குகிறது. இந்தத்தளத்தில், 'அக்ஷய் உர்ஜா வலைதளம்' மற்றும் 'இந்தியா புதுப்பிக்கத்தக்க எண்ணங்கள் பரிமாற்றம் – India Renewable Idea Exchange (IRIX) போன்ற கூடுதல் தளங்களும் உள்ளன.

**7.ஐ.நா வளர்ச்சித்திட்டம் வெளியிட்டுள்ள பாலின சமூக நெறிகள் குறியீட்டு அறிக்கையின்படி, எத்தனை நாடுகள் பாலின சமத்துவத்தை அடைந்துள்ளன?**

அ. இரண்டு

ஆ. மூன்று

இ. ஐந்து

**ஈ. சுழியம் ☑**

❖ ஐ.நா வளர்ச்சித்திட்டம் அண்மையில் வெளியிட்ட பாலின சமூக நெறிகள் குறியீட்டு அறிக்கையின்படி, உலகில் எந்த நாடும் பாலின சமத்துவத்தை அடையவில்லை. எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் பாலின சமத்துவத்தை அடைவதற்கான பாதையில் உலக நாடுகள் எதுவும் செல்லவில்லை என்றும் பொருளாதார வாய்ப்பில் பாலின இடைவெளியை முற்று முழுதாக நீக்குவதற்கு, தற்போதிலிருந்து சுமார் 257 ஆண்டுகள் வரை ஆகும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. பெண்களுக்கு எதிரான பக்கச் சார்புடைய கருத்துக்களைக்கொண்ட நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது.

**8. SAARC உறுப்புநாடுகளின் தலைவர்களிடையே நடைபெற்ற காணொளிக் கருத்தரங்கில், "COVID–19 அவசரகால நிதி"யை முன்மொழிந்த நாடு எது?**

அ. இலங்கை

**ஆ. இந்தியா ☑**

இ. பாகிஸ்தான்

ஈ. வங்கதேசம்



❖ SAARC நாடுகளில் 'COVID–19' வைரஸ் தொற்றைக்கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக் –குவது தொடர்பாக SAARC நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடல் செய்தார். கடைசியாக, கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பரில் இதுபோன்றவொரு சந்திப்பை SAARC தலைவர்கள்

நடத்தினர். இக்கலந்துரையாடலின்போது, இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, "COVID–19 அவசர கால நிதி"யை முன்மொழிந்தார். ஆரம்பகட்ட பங்களிப்பாக இதற்கு இந்திய நாட்டின் சார்பில் $10 மில்லியன் அமெரிக்க டாலர் அளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

- இந்தியாவில் மருத்துவர்கள் மற்றும் வல்லுநர்களைக்கொண்ட விரைந்த செயல்பாட்டுக் குழுவை இந்தியா உருவாக்கும் என்றும் அதில் பரிசோதனை உபகரணங்கள் மற்றும் சாதனங்களும் இருக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். தேவையின் அடிப்படையில் அதைப்பயன்படுத்திக்கொள்ள அவை ஆயத் –தநிலையில் வைக்கப்பட்டிருக்கும் எனப் பிரதமர் கூறினார். அருகிலுள்ள நாடுகளில், அவசரநிலை செயல்பாட்டு குழுக்களுக்கு ஆன்லைன் பயிற்சியளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதாக பிரதமர் கூறினார்.

**9.ஜம்மு–காஷ்மீர் துணைநிலை ஆளுநர் G C முர்முவின் நான்காவது ஆலோசகராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. பசீர் அகமது கான் ☑**

ஆ. முனீர் கான்

இ. ஆனந்தி வெங்கடேஸ்வரன்

ஈ. விஜய் குமார்



- ஜம்மு–காஷ்மீர் துணைநிலை ஆளுநர் G C முர்முவின் நான்காவது ஆலோசகராக காஷ்மீர் பிரதேச ஆணையர் பசீர் அகமது கான், இ.ஆ.ப நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் தொடர்பான உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகத்தின் துணை செயலாளர் வெளியிட்டார். இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆலோசகராக நியமிக்கப்பட்ட முன்னாள் CRPF தலைமை இயக்குநர் இராஜீவ் ராய் பட்நாகர், பாரூக் கான், இ.கா.ப மற்றும் KK சர்மா, இ.ஆ.ப ஆகிய மூவரும் பிற மூன்று ஆலோசகர்களாவர்.

**10.அம்பேத்கர் பௌத்தத்தைத் தழுவ முக்கிய காரணமாக இருந்த ஒருவர் அண்மையில் காலமானார். அவர் பெயரென்ன?**

அ. சாந்து முகர்ஜி

**ஆ. சதானந்த் புல்செல் ☑**

இ. H R பரத்வாஜ்

ஈ. பொட்டூரி வெங்கடேஸ்வர்



- Dr. பாபாசாகேப் அம்பேத்கர் ஸ்மரக் சமிதியின் நிறுவனச்செயலாளர் சதானந்த் புல்செல் (91), சமீபத்தில் காலமானார். 1956ஆம் ஆண்டில், பாபாசாகேப் அம்பேத்கர், பௌத்தத்தை தழுவிய இடமான நாக்பூரில் உள்ள தீக்ஷபூமியை இந்தக் கூட்டமைப்பு பராமரித்து வருகிறது.

- Dr. பாபாசாகேப் அம்பேத்கரின் சித்தாந்தங்களைப் பின்பற்றுபவராக இருந்த சதானந்த் புல்செல், அந்த இடத்தில் ஒரு தூபியை எழுப்புவதில் முக்கிய பங்குவகித்தார். ஆறு இலட்சத்திற்கும் அதிகமான பின்தொடர்பாளர்களுடன் Dr. பாபாசாகேப் அம்பேத்கர் மதம்மாறியபோது, புல்செல், நாக்பூரின் துணை மாநகரத்தந்தையாகவும் இருந்தார்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளிலும் தமிழ்வழியில் படித்திருந்தால் அரசாங்கப் பணியில் முன்னுரிமை வழங்க வழிவகைசெய்யும் சீர்திருத்த மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
    - இந்த மசோதாவின்படி, இனி பட்டப்படிப்பு மட்டுமின்றி 10, 12ஆம் வகுப்புகளிலும் தமிழ் வழியில் படித்திருந்தால் மட்டுமே அரசாங்கப்பணியில் முன்னுரிமை வழங்கப்படும். அதாவது, பட்டப்படிப்பு தகுதிக்கான அரசுப் பணிக்கு, பட்டப்படிப்புடன் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளையும் தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.
    - அதேபோன்று 10ஆம் வகுப்பு தகுதியுள்ள அரசுப்பணிக்கு 6–10ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியில் பயின்றிருக்க வேண்டும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றபின்னர், ஆளுநரின் ஒப்புதல் பெற்று சட்டவடிவம் பெறும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1. RCS–உதான் திட்டத்தின்கீழ் இந்தூருடன் அண்மையில் இணைக்கப்பட்ட "இந்தியாவின் பளிங்கு நகரம்" என்றும் அழைக்கப்படுகிற இராஜஸ்தான் நகரம் எது?**



அ. கோட்டா

ஆ. பிகானேர்

**இ. கிஷன்கர் ☑**

ஈ. லால்கர்

❖ இராஜஸ்தான் மாநிலத்தின் அஜ்மீர் மாவட்டத்தில் உள்ள கிஷன்கர் நகரம், "இந்தியாவின் பளிங்கு நகரம்" என்று அழைக்கப்படுகிறது. RCS–உதான் திட்டத்தின்கீழ் இந்தூரிலிருந்து கிஷன்கருக்கு வாரத்திற்கு மும்முறை செல்லும் வானூர்தி சேவையை உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகம் தொடங்கியது. உதான்–3 ஏலச்செயல்பாட்டின்போது ஸ்டார் ஏர் நிறுவனத்துக்கு இந்தூர் – கிஷன்கர் வழித்தடம் வழங்கப்பட்டது. இதன்மூலம், உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகமானது உதான் திட்டத்தின்கீழ் இதுவரை 268 வழித்தடங்களை இயக்கியுள்ளது.

**2.எந்த ஐரோப்பிய நாடு, அண்மையில், போட்டிக்கு எதிரான நடத்தைக்காக தொழில்நுட்ப நிறுவனமான ஆப்பிள் நிறுவனத்திற்கு 1.1 பில்லியன் யூரோ அளவுக்கு அபராதம் விதித்தது?**

அ. ஜெர்மனி

**ஆ. பிரான்ஸ் ☑**

இ. இத்தாலி

ஈ. ஸ்பெயின்

❖ பிரான்ஸின் போட்டி ஆணையம், அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான ஆப்பிள் நிறுவனத்திற்கு, அண்மையில், 1.1 பில்லியன் யூரோ ($1.2 பில்லியன் டாலருக்கு சமம்) அளவுக்கு அபராதம் விதித்தது. சுயாதீன சில்லறை வியாபாரிகளிடம் ஆப்பிள் நிறுவனத்தின் போட்டிக்கு எதிரான நடத்தைக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸில் உள்ள சுயாதீன சில்லறை விற்பனையாளர்கள் மீது, ஆப்பிள் நிறுவனம் அதன் பொருளாதார ஆற்றலை பயன்படுத்தியதாக அந்நாட்டின் ஆணையம் அறிவித்தது.

**3. COVID–19 நோய்த்தொற்றிலிருந்து அதன் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக $4 பில்லியன் டாலர் மதிப்பில் நெருக்கடிநிலைக்கு எதிரான நிதியத்தை உருவாக்க முடிவுசெய்துள்ள நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. இரஷ்யா ☑**

இ. அமெரிக்கா

ஈ. பாகிஸ்தான்



❖ கொரோனா வைரஸ் தாக்குதலிலிருந்து தனது பொருளாதாரத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் $4 பில்லியன் டாலர் (300 பில்லியன் ரூபிள்) மதிப்பில் நெருக்கடிநிலைக்கு எதிரான நிதியத்தை ரஷ்யா

உருவாக்கும் என அந்நாட்டின் பிரதமர் அண்மையில் அறிவித்தார். இந்த ஆண்டு, இரஷ்யா தனது வளர்ச்சி இலக்குகளை இழக்க நேரிடும் என்றும், கொரோனா வைரஸின் தாக்கத்தால் பன்னாட்டுச் சந்தைகள் நொறுங்கியுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

❖ இரஷ்யாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான எண்ணெயின் விலையில் பெரும்வீழ்ச்சி ஏற்பட்டு அதன் பொருளாதாரத்தை குறைத்துள்ளது. சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் வானூர்தி நிறுவனங்களுக்கான வரிவிலக்குகளை உள்ளடக்கிய புதிய ஆதரவு நடவடிக்கைகளை அந்நாடு வெளியிடவுள்ளது.

**4.மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்ட இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி யார்?**



**அ. இரஞ்சன் கோகோய் ☑**

ஆ. தீபக் மிஸ்ரா

இ. ஜெகதீஷ் சிங் கெகர்

ஈ. T S தாக்கூர்

❖ உள்துறை அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி இரஞ்சன் கோகோய், குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்களால் மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்–பட்டுள்ளார். உறுப்பினர்களுள் ஒருவரின் ஓய்வுகாரணமாக எழும் காலியிடத்தை நிரப்புவதற்காக இந் நியமனம் மேற்கொள்ளப்படுகிறது. மாநிலங்களவையில் அதிகபட்சம் 250 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் பன்னிருவரை குடியரசுத்தலைவர் பரிந்துரைப்பார். இந்தியாவின் 46ஆவது தலைமை நீதிபதியாக இருந்தவர் இரஞ்சன் கோகோய்.

**5.2019–20'இல் பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதற்கான மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒப்பந்தங்களில், இந்திய நிறுவனங்களின் பங்கு எத்தனை சதவீதம்?**



அ. 25.03 %

ஆ. 50.03 %

**இ. 75.03 % ☑**

ஈ. 90.03 %

❖ பாதுகாப்பு அமைச்சகத்தின் அண்மைய தகவல்களின்படி, பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சகத்தால் போடப்பட்ட ஒப்பந்தங்களில், இந்திய நிறுவனங்களின் பங்கு 2019–20'இல் 75.03 சதவீதமாகும்.

❖ உள்நாட்டில் தயாரிக்கப்படும் உபகரணங்களை அதிகபட்ச அளவிற்கு வாங்குவதற்கு மத்திய பாதுகாப்பு அமைச்சகம் முயற்சிப்பதால், இப்பங்கு 2015–16'இல் இருந்த 39.06 சதவீதத்திலிருந்து 2019–20'இல் 75.03 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் போடப்பட்ட நூறு அயல்நாட்டு ஒப்பந்தங்க–ளுக்கு எதிராக இம்முறை இந்திய விற்பனையாளர்களுடன் 158 ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

**6.எந்தப் பொதுத்துறை நிறுவனத்தின் தலைவராகவும் மேலாண்மை இயக்குநராகவும் இரவீந்தர் சிங் தில்லான் நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ. பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ☑**

ஆ. இந்திய நிலக்கரி நிறுவனம்

இ. NTPC நிறுவனம்

ஈ. NLC நிறுவனம்

❖ பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக இரவீந்தர் சிங் தில்லானை நியமிக்க அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. மின்சார அமைச்சகத்தின் உதவியுடன் செயல்பட்டுவரும் இந்நிறுவனம், 'நவரத்னா' தகுதிபெற்ற ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இரவீந்தர் சிங் தில்லான் தற்போது அதே பொதுத்துறை நிறுவனத்தில் இயக்குநராக (திட்டங்கள்) பணியாற்றி வருகிறார்.

**7.எந்த நாட்டின் மத்திய வங்கி அதன் முக்கிய வட்டி விகிதத்தை கிட்டத்தட்ட சுழியமாகக்குறைத்து $700 பில்லியன் அமெரிக்க டாலரை பத்திரங்களாக வாங்குவதாக அறிவித்தது?**

அ. இந்தியா

ஆ. இலங்கை

**இ. அமெரிக்கா ☑**

ஈ. இரஷ்யா



❖ அமெரிக்காவின் மத்திய வங்கியான, 'பெடரல் ரிசர்வ்' அதன் முக்கிய (benchmark) வட்டி விகிதத்தை கிட்டத்தட்ட சுழியமாகக் (0–0.25) குறைத்துள்ளது. பொருளாதார நடவடிக்கைகளை எளிதாக்குதற்காக மத்திய வங்கி $700 பில்லியன் அமெரிக்க டாலர் பத்திரங்களை வாங்கப்போவதாகவும் அறிவித்தது. அதன் அதிகபட்ச வேலைவாய்ப்பு மற்றும் விலை நிலைத்தன்மை இலக்கை அடைய, பொருளாதாரம் சரியான பாதையில் செல்லும்வரை இவ்விலக்கு வரம்பு பராமரிக்கப்படும் என அவ்வங்கி கூறியது.

**8.அண்மையில் காலமான பாட்டீல் புட்டப்பா தொடர்புடைய துறை எது?**

அ. விளையாட்டு

**ஆ. இதழியல் ☑**

இ. வணிகம்

ஈ. ஆராய்ச்சி



❖ 'பாப்பு' என அன்போடு அழைக்கப்பட்ட மூத்த இதழாளர் பாட்டீல் புட்டப்பா (99) சமீபத்தில் காலமானார். காந்திய கொள்கைகளை தீவிரமாக பின்பற்றிவந்த அவர் காதி ஆர்வலராகவும் இருந்தார். கர்நாடக இராஜ்யோத்சவ விருது, TSR விருது, 'நடோஜா' உட்பட பல பெருமைமிகு விருதுகளைப் பெற்றுள்ள அவருக்கு, அண்மையில், கர்நாடக மாநில முதலமைச்சர், 'பசவ விருது' வழங்கினார்.

**9. 'Career Back 2 Women' என்று அழைக்கப்படும் பெண்களுக்கான மறு–திறன்படுத்துதல் திட்டத்தை தொடங்கியுள்ள இந்திய நிறுவனம் எது?**

**அ. IIT மெட்ராஸ் ☑**

ஆ. IIT மும்பை

இ. IIT அகமதாபாத்

ஈ. IIT கரக்பூர்

❖ அண்மையில், பெண்களுக்கான மறு–திறன்படுத்துதல் திட்டத்தை, 'Career Back 2 Women' என்ற பெயரில் IIT மெட்ராஸ் அறிமுகப்படுத்தியுள்ளது. தங்கள் தொழிற்முறை வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெற்ற பெண்களுக்கு, 150 ம.நேரம் மறு–திறன்படுத்துதல் பயிற்சியை அளிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பயிற்சியின் நிறைவில் சான்றிதழும் வழங்கப்படும். செயற்கை நுண்ணறிவு, எந்திரக் கற்றல், இணைய பாதுகாப்பு, தரவு அறிவியல் மற்றும் பெருந்தரவு ஆகியவற்றை இது பாடமாகக் கொண்டுள்ளது. மெட்ராஸ் IIT'இன் டிஜிட்டல் திறன் அகாடமிமூலம் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

**10. அண்மையில் நூற்றாண்டு பிறந்தநாள்விழா கொண்டாடப்பட்ட சேக் முஜிபுர் ரகுமான், எந்த நாட்டின் நிறுவன அதிபராக இருந்தார்?**

அ. நேபாளம்

**ஆ. வங்கதேசம் ☑**

இ. தாய்லாந்து

ஈ. ஆப்கானிஸ்தான்



❖ 'வங்கபந்து' எனப்பொதுவாக அழைக்கப்படும் சேக் முஜிபுர் ரகுமான், சுதந்திர நாடான வங்கதேசத்தின் நிறுவன அதிபராக இருந்தார். அப்போதைய கீழைப்பாகிஸ்தானில், பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு எதிரான இயக்கத்திற்கு அவர் தலைமைதாங்கினார். அது, 1971'இல் வங்கதேசத்தின் விடுதலைக்கு வழிவகுத்தது. அவரது நூற்றாண்டு பிறந்தநாள் விழாவானது 2020 மார்ச்.17 அன்று வங்கதேசத்தில் கொண்டாடப்பட்டது. 'முஜிப் பர்ஷோ' என்ற பெயரில் ஆண்டு முழுவதும் நடைபெறும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம்' தமிழ்நாட்டில், வரும் 2020 ஏப்ரல் 1 முதல் அமல்படுத்தப்பட உள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சோதனை முறையில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்தின்மூலம், குடும்ப அட்டை வைத்துள்ளோர் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவியலும்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.தற்போதைய பாதுகாப்பு அமைச்சரான இராஜ்நாத் சிங், எந்த முன்னாள் மத்திய பாதுகாப்பு அமைச்சரை அடிப்படையாகக்கொண்ட, 'Invincible' என்ற நூலை வெளியிட்டார்?**

அ. அருண் ஜெட்லி

**ஆ. மனோகர் பாரிக்கர் ☑**

இ. ஜார்ஜ் பெர்னாண்டஸ்

ஈ. ஜஸ்வந்த் சிங்



- காலஞ்சென்ற கோவா முதலமைச்சரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான மனோகர் பாரிக்கருக்கு அவரது ஓராண்டு நினைவுநாளை முன்னிட்டு, மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் அஞ்சலி செலுத்தினார். அப்போது, 'Invincible – A Tribute to Manohar Parrikar' என்ற நூலையும் வெளியிட்டார்.

- கோவாவின் முதலமைச்சராக இருந்த மனோகர் பாரிக்கர், நோய் காரணமாக காலமானார். அவருக்குப் பிறகு, பிரமோத் சாவந்த் அம்மாநிலத்தின் அடுத்த முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். 2014 முதல் 2017 வரை இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக மனோகர் பாரிக்கர் பணியாற்றினார்.

**2.இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, 'PA'க்கள் மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்பட உள்ளன. இதில், 'PA' என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Payment Agency

**ஆ. Payment Aggregator ☑**

இ. Payment Authority

ஈ. Processing Authority




- கொடுப்பனவு திரட்டிகளின் முழு நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்துவதாக இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் அறிவித்தது.

- இந்தக் கொடுப்பனவு திரட்டிகள், மின்னணு வணிக தளங்கள் மற்றும் வணிகர்களை வாடிக்கையாள –ர்களிடமிருந்து பல்வேறு முறைகளில் கட்டணங்களை வசூலிக்க உதவுகின்றன. கொடுப்பனவு திரட்டிகள் (PA's) மற்றும் கட்டண நுழைவாயில்களை ஒழுங்குபடுத்துதற்கான வழிகாட்டுதல்களின்படி, தற்போதுள்ள கொடுப்பனவு திரட்டிகள், 2021 மார்ச்.31ஆம் தேதிக்குள் ₹15 கோடி நிகர மதிப்பும், 2023 மார்ச்.31ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்னோ ₹25 கோடி நிகர மதிப்பு பெற்றிருக்க வேண்டும். அதன்பிறகு ₹25 கோடி என்ற நிகர மதிப்பினை எல்லா நேரங்களிலும் பராமரித்தல் வேண்டும்.

**3. 'My Encounters in Parliament' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**அ. பாலச்சந்திர முங்கேகர் ☑** ஆ. ஹமீத் அன்சாரி

இ. D ராஜா ஈ. சீதாராம் யெச்சூரி



❖ இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத்தலைவரான ஹமீது அன்சாரி, பாலச்சந்திர முங்கேக்கர் எழுதிய, 'My Encounters in Parliament' என்ற நூலை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், NCP தலைவர் ஷரத் பவார், CPI பொதுச்செயலாளர் D ராஜா, CPI (M) பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி ஆகியோர் கலந்துகொண்டனர். பாலச்சந்திர முங்கேகர் ஓர் இந்திய பொருளாதார வல்லுநரும், சமூக சேவகரும் மற்றும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமாவார். அம்பேத்கரிய கொள்கைகளின் தீவிர பின்பற்றாளறான இவர் ஒரு வேளாண் பொருளாதார நிபுணருமாவார். திட்ட ஆணையம் உட்பட பல முக்கிய அமைப்புகளில் அவர் பணியாற்றியுள்ளார்.

**4.அண்மையில் நிறைவேற்றப்பட்ட வானூர்தி (திருத்தம்) மசோதா, 2020இன் பின்னணியில், எத்தனை ஒழுங்குமுறை நிறுவனங்கள் சட்டரீதியான அமைப்புகளாக மாற்றப்படவுள்ளன?**

அ. 3 ☑

ஆ. 4

இ. 5

ஈ. 6



❖ வானூர்தி (திருத்த) மசோதா, 2020, மக்களவையில் குரல் வாக்கெடுப்புமூலம் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா வானூர்தி சட்டம், 1934'இல் திருத்தம் மேற்கொள்ள விழைகிறது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் தற்போதுள்ள மூன்று ஒழுங்குமுறை அமைப்புகளை சட்டரீதியான அமைப்புகளாக மாற்றுவதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA), உள்நாட்டு விமானப் போக்குவரத்து பாதுகாப்பு பணியகம்) மற்றும் (விமான விபத்து குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் பணியகம்) ஆகிய மூன்றும் இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை நிறுவனங்களாகும்.

**5. NASSCOM அறக்கட்டளையுடன் இணைந்து, 'Innovate for Accessible India' என்ற பரப்புரையைத் தொடங்கியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ. கூகுள்    ஆ. மைக்ரோசாப்ட் ☑

இ. ஆரக்கிள்    ஈ. இன்போசிஸ்

INNOVATE FOR AN ACCESSIBLE INDIA

❖ மைக்ரோசாப்ட் இந்தியா மற்றும் NASSCOM அறக்கட்டளை ஆகியவை இணைந்து, 'Innovate for Accessible India' என்ற பரப்புரையத் தொடங்கியுள்ளன. சமமான வாய்ப்புகளை சிறந்த முறையில் அணுகுவதற்கு தேவையான தொழில்நுட்பத்துடன், மாற்றுத்திறனாளிகளை மேம்படுத்துவதை இந்தப் பரப்புரை நோக்கமாகக்கொண்டுள்ளது.

❖ மாற்றுத்திறனாளிகளால் எதிர்கொள்ளப்படும் சவால்களை எதிர்கொள்ளும், தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை உருவாக்குவதற்காக மாணவர்கள், குடிமக்கள் மற்றும் சமூக அமைப்புகளிடமிருந்து இந்தப் பரப்புரை விண்ணப்பங்களை வரவேற்கிறது. பத்து சிறந்த தீர்வுகள், நிதியுதவியுடன் மைக்ரோசாப்ட் மற்றும் NASSCOM அறக்கட்டளையின் வழிகாட்டுதல் ஆதரவைப் பெறும்.

**6.ஏர் இந்தியா தலைவரும் மேலாண்மை இயக்குநருமான அஷ்வானி லோகானி, எந்த மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. உத்தர பிரதேசம்

ஆ. குஜராத்

**இ. ஆந்திர பிரதேசம் ☑**

ஈ. இராஜஸ்தான்



❖ ஏர் இந்தியா நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான அஷ்வானி லோகானி, அண்மையில், ஆந்திர பிரதேச மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். மாநில தலைமைச்செயலாளர் வெளியிட்ட உத்தரவில் இது அறிவிக்கப்பட்டிருந்தது. முன்னதாக, இரயில்வே வாரியத்தின் தலைவர் மற்றும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் & மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட பதவிகளில் பணியாற்றினார்.

**7. 'உலக நகரங்களின் உச்சிமாநாடு' என்பது, எந்நாடால், ஈராண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் சர்வதேச உச்சிமாநாடாகும்?**

அ. பிரிட்டன்

ஆ. ஜப்பான்

**இ. சிங்கப்பூர் ☑**

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

❖ 'உலக நகரங்களின் உச்சிமாநாடு' என்பது சிங்கப்பூரால் ஈராண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு சர்வதேச உச்சிமாநாடு ஆகும். இம்மாநாடு, வரும் 2020 ஜூலை 5–9 வரை, "Liveable and Sustainable Cities: Adapting to a Disrupted World" என்ற கருப்பொருளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பன்னாட்டு அரசாங்கங்களின் தலைவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோர் காலநிலை மாற்றம், சமூக மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப சீர்குலைவுகள் குறித்த சவால்கள் குறித்து விவாதிக்கின்றனர்.

**8. அட்னான் அல்–சூர்பி, எந்த நாட்டின் புதிய பிரதமராக அதன் அதிபர் பர்காம் சாலி அவர்களால் நியமிக்கப்பட்டார்?**

அ. ஈரான்

**ஆ. ஈராக் ☑**

இ. இஸ்ரேல்

ஈ. ஓமன்



❖ ஈராக் அதிபர் பர்காம் சாலி, அந்நாட்டின் புதிய பிரதமராக அட்னான் அல்–சூர்பியை நியமித்துள்ளார். ஈராக் நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்கு இடையில் இந்த அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. முப்பது நாட்களுக்குள், அட்னான் அல்–சூர்பி தனது அமைச்சரவையை உருவாக்க வேண்டும். அது, ஈராக் நாடாளுமன்றத்தில் நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டும்.

❖ அரசாங்கத்திற்கு எதிரான பரவலான பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களைத்தொடர்ந்து, கடந்த டிசம்பரில் பதவி விலகிய முன்னாள் பிரதமர் அதல் அப்துல் மதிக்கு பதிலாக அல்–சூர்பி நியமிக்கப்பட்டுள்ளார்.


**9. COVID–19 குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் பரப்புவதற்காக எந்திர மனிதர்களைப் பயன்படுத்தும் மாநில அரசு எது?**

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. தெலுங்கானா

**இ. கேரளா ☑**

ஈ. ஒடிசா



❖ பொதுமக்களிடையே COVID–19 குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக எந்திர மனிதர்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு முயற்சியை கேரள மாநில அரசு தொடங்கியுள்ளது. துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான மாநில அரசின் முன்னெடுப்பான கேரள துளிர்–நிறுவன திட்டத்தின்கீழ் கேரள மாநிலத்தில் 'அசிமோ' என்ற துளிர் நிறுவனம்மூலம் 2 ரோபோக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ இதில் ஒரு எந்திரமனிதர், முகமூடியை அணிந்துகொண்டு கை தூய்மைப்படுத்தி மற்றும் முகக்கவசங்–களை பொதுமக்களுக்கு விநியோகிக்கிறது. மற்றொரு எந்திரமனிதர் கேள்விகளுக்கு பதிலளிக்கிறது. இவையிரண்டும் முன்னோட்ட அடிப்படையில் கொச்சியில் நிறுத்தப்பட்டுள்ளன.

**10. கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு, சமீபத்தில் காலமான கால்பந்து பயிற்சியாளர் பிரான்சிஸ்கோ கார்சியா, எந்த நாட்டைச் சார்ந்தவர்?**

அ. அமெரிக்கா

**ஆ. ஸ்பெயின் ☑**

இ. தென் கொரியா

ஈ. தாய்லாந்து



❖ அட்லெடிகோ போர்ட்டா ஆல்டாவின் இளையோர் அணியுடன் பணிபுரிந்த 21 வயதான ஸ்பானிய கால்பந்து பயிற்சியாளர் பிரான்சிஸ்கோ கார்சியா, COVID–19 வைரஸ் நோய்த்தொற்று காரணமாக உயிரிழந்தார். இதன்மூலம், இப்பகுதியில் கொரோனா வைரஸால் இறந்த ஐந்தாவது மற்றும் இளம் வயது நபராக இவருள்ளார். COVID–19 நோய்த்தொற்றுக்கான சிகிச்சையின்போது அவர் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

❖ கொரோனா வைரஸ் தொற்றின் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக, ஸ்பெயினில் உள்ள முக்கிய கால்பந்து லீக் போட்டிகள் அனைத்தும் காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளன.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ துப்புரவுப்பணியாளர்கள் அனைவரும் இனி, "தூய்மைப்பணியாளர்கள்" என அழைக்கப்படுவார்கள் என சட்டப்பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி அறிவித்தார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.கொரோனா வைரஸ் நோய்த்தொற்றைச் சமாளிப்பதற்காக ₹20,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள மாநில அரசு எது?**

அ. மகாராஷ்டிரா

**ஆ. கேரளா ☑**

இ. உத்தர பிரதேசம்

ஈ. தெலுங்கானா



❖ கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை எதிர்கொள்ள ₹20,000 கோடி நிதி ஒதுக்கி கேரள மாநில அரசு அறிவித்துள்ளது. இந்தத் தொகுப்பில், தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையை தள்ளுபடி செய்வதற்கான நிதி, நுகர்வோர் கடன்களை வழங்குதல், இரண்டு மாதத்துக்கான ஓய்வூதியத்தை முன்கூட்டியே வங்கிக்கணக்கில் வரவுவைத்தல் மற்றும் ஒரு சுகாதார தொகுப்பு ஆகியவை அடங்கும்.

❖ இம்மாதத்துக்கான அத்தியாவசிய நியாயவிலைப்பொருட்களை அனைவருக்கும் இலவசமாக வழங்க கேரள மாநில அரசு முடிவுசெய்துள்ளது. கேரள மாநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் நியாயவிலை கடைகள்மூலம் 10 கிலோ வரை இலவச உணவு தானியங்களும் வழங்கப்படவுள்ளது.

**2.எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 83 தேஜாஸ் போர் விமானங்களை வாங்குவதற்கு, பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கான கவுன்சில் ஒப்புதல் அளித்தது?**

**அ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் ☑**

ஆ. பாரத மின்னணு நிறுவனம்

இ. பாரத மிகுமின் நிறுவனம்

ஈ. தளவாட தொழிற்சாலை வாரியம்

❖ ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (HAL) தயாரிக்கும் 83 தேஜாஸ் போர் விமானங்களை வாங்குவதற்கு, பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கான கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது. இலகுரக போர் விமானமான தேஜாஸை, பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பின் கீழ் இயங்கிவரும் போர் விமானங்கள் மேம்பாட்டு நிறுவனம் வடிவமைத்துள்ளது. ஏற்கனவே 43 போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான முந்தைய ஆணையுடன் இந்தப் புதிய கொள்முதல் ஆணையும் இணைந்துள்ளது.

**3. SC/ST பணியாளர்களுக்கான பதவி உயர்வு இட ஒதுக்கீட்டை நீக்கியுள்ள மாநில அரசு எது?**

**அ. உத்தரகண்ட் ☑**

ஆ. பீகார்

இ. மத்திய பிரதேசம்

ஈ. உத்தர பிரதேசம்

- SC/ST பணியாளர்களுக்கான பதவி உயர்வு இட ஒதுக்கீட்டை நீக்குவதற்கு உத்தரகண்ட் மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த பிப்ரவரியில், "இட ஒதுக்கீடு என்பது அடிப்படை உரிமை அன்று. ஒரு மாநில அரசு விரும்பினால் இட ஒதுக்கீடு வழங்கலாம்; இல்லையெனில் அரசை வற்புறுத்த முடியாது" என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. தற்போது உத்தரகண்ட் அரசு அவ்வுத்தரவை அமல்படுத்தியுள்ளது. அது பதவி உயர்வுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் நடைமுறையை தடைசெய்துள்ளது.

**4. ₹10,000 கோடி மதிப்புள்ள அரசுப்பத்திரங்களை வாங்குவதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி (RBI) OMO'ஐ நடத்திவருகிறது. 'OMO' என்பது எதைக்குறிக்கிறது?**

அ. Open Money Operations

ஆ. Open Market Operations ☑

இ. Overview of Market Operations

ஈ. Overview of Money Operations




- அனைத்து சந்தைப்பிரிவுகளையும் நிலையானதாக வைத்திருக்கும் வகையில், ₹10,000 கோடிக்கு திறந்த சந்தையில் பத்திரங்களை வாங்கும் என இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. COVID–19 வைரஸ் நோய்த்தொற்றின் அபாயங்கள் அதிகரித்து வருவதால், நிதிச்சந்தைகளில், நிதி நிலைமைகள் மோசமான சவால்களை எதிர்கொண்டு வருகிவதாகவும், இதனால் வர்த்தக சந்தைகளில் பொருளாதா–ரம் கடினமாகி வருவதாகவும் RBI அதன் அறிக்கையில் தெரிவித்ததுள்ளது.
- பணப்புழக்கத்தை அதிகரிப்பதற்காக திறந்த சந்தைகளில் அரசாங்க பத்திரங்களை வாங்கவுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

**5. WHO, UNICEF மற்றும் UNDP ஆகியவற்றுடன் இணைந்து, 'கொரோனா வைரஸ் தகவல் மையத்தை' தொடங்கியுள்ள சமூக ஊடகம் எது?**

அ. டுவிட்டர்

ஆ. வாட்ஸப் ☑

இ. இன்ஸ்டாகிராம்

ஈ. டெலிகிராம்



- பேஸ்புக்கிற்கு சொந்தமான வாட்ஸ்அப், அண்மையில் உலக நலவாழ்வு அமைப்பு, ஐ.நா சிறார் நிதியம் (UNICEF) மற்றும் ஐ.நா வளர்ச்சித்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து, "வாட்ஸ்அப் கொரோனா வைரஸ் தகவல் மையம்" என்றவொன்றை உலகளவில் அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. கொரோனா வைரஸ்பற்றிய போலிச்செய்திகள் & அதுகுறித்த வதந்திகளைக்கட்டுப்படுத்துவதற்காக, உண்மைச் செய்தியா என சரிபார்க்கும் போயன்டர் என்னும் பன்னாட்டு நிறுவனத்திற்கு வாட்ஸ்அப் நிறுவனம் $1 மில்லியன் டாலரை வழங்கியுள்ளது.

**6.** **COVID-19 நோய்த்தொற்றைக் கையாளுவதற்காக அதன் உறுப்பு நாடுகளுக்கு $6.5 பில்லியன் மதிப்பிலான நிதியுதவியை அறிவித்துள்ள பன்னாட்டு வங்கி எது?**

அ. புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான ஐரோப்பிய வங்கி

ஆ. ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி

**இ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑**

ஈ. அமெரிக்க வளர்ச்சி வங்கி

❖ COVID-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் அதன் வளரும் உறுப்பு நாடுகளின் உடனடி தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக மணிலாவைச் சார்ந்த ஆசிய வளர்ச்சி வங்கி, அண்மையில், $6.5 பில்லியன் மதிப்பிலான (₹48,230 கோடி) நிதியுதவியை அறிவித்துள்ளது.

❖ இந்த அறிவிப்பின்படி, மொத்த நிதியில், தொற்றுநோயால் ஏற்பட்ட மோசமான சுகாதார சீர்கேட்டுக்கு தீர்வுகாண்பதற்காக $3.6 பில்லியன் டாலர் நிதி அரசாங்கங்களுக்கும், பொருளாதார சீர்கேட்டுக்கு தீர்வு காண்பதற்காக $1.6 பில்லியன் டாலர் நிதி குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் பிராந்திய வர்த்தகத்திற்கும் வழங்கப்படும்.

**7.அண்மையில் காலமான ரோஜர் மேவெதர், தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. பளு தூக்குதல்

**ஆ. குத்துச்சண்டை ☑**



இ. மல்யுத்தம்

ஈ. சதுரங்கம்

❖ 2 முறை உலக சாம்பியனாகவும் குத்துச்சண்டைப் பயிற்சியாளராகவும் இருந்த ரோஜர் மேவெதர் (58), அண்மையில் காலமானார். இவர், குத்துச்சண்டை வீரரான பிளாய்ட் மேவெதரின் மாமாவும் ஆவார். சூப்பர் பெதர்வெய்ட் மற்றும் சூப்பர் லைட்வெய்ட் பிரிவுகளில் உலக பட்டங்களை அவர் வென்றுள்ளார். தனது 20 ஆண்டுகால குத்துச்சண்டை வாழ்வில், அவர் மொத்தம் 59 வெற்றிகளைப் பெற்றார்.

**8.எந்த மத்திய அமைச்சரின் தலைமையின்கீழ், இந்தியப்பிரதம அமைச்சரால் அறிவிக்கப்பட்ட, 'COVID-19 பொருளாதார மீட்புப்பணிக்குழு' உள்ளது?**

அ. பியூஷ் கோயல்

ஆ. ஹர்ஷ் வர்தன்



**இ. நிர்மலா சீதாராமன் ☑**

ஈ. இராஜ்நாத் சிங்

❖ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி தனது உரையின்போது, 'COVID-19 பொருளாதார மீட்புப்பணிக்குழு' அமைப்பதாக அறிவித்தார். நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான இந்தப் பணிக்குழு, 'COVID-19' நோய்த்தொற்றால் ஏற்பட்ட பொருளாதார சீரழிவை அளவிடுவதோடு அதற்குத்தகுந்த நடவடிக்கைகளையும் எடுக்கும்.

- ❖ கருத்துக்களைப்பெறுவதற்கும், 'COVID–19'இன் பொருளாதார தாக்கத்தை மதிப்பிடுவதற்கும் கால்நடை வளர்ப்பு, பால் மற்றும் மீன்வளத்துறை, உள்நாட்டு வான்போக்குவரத்து, சுற்றுலா மற்றும் MSME ஆகிய அமைச்சர்களை நிதியமைச்சர் சந்திக்கவுள்ளார்.

**9.எந்த நாட்டிலிருந்து 16,479 இலகுரக எந்திர துப்பாக்கிகளை கொள்முதல் செய்வதற்காக, பாதுகாப்பு அமைச்சகம், ₹880 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

அ. அமெரிக்கா



**ஆ. இஸ்ரேல் ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ரஷ்யா

- ❖ இந்திய ஆயுதப்படைகளுக்கு ₹880 கோடி மதிப்பில், 'நெகேவ்' என்னும் இலகுரக எந்திர துப்பாக்கிகள் வாங்க, மத்திய பாதுகாப்பு அமைச்சகம், இஸ்ரேல் ஆயுத விற்பனை நிறுவனம் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. மொத்தம் 16,479 இலகுரக துப்பாக்கிகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. பல்வேறு நாடுகளின் பாதுகாப்புப்படைகளால் உபயோகப்படுத்தப்படும் இந்த, 'நெகேவ் 7.62 x 51 மி.மீ' இரக துப்பாக்கிகள், ஆயுதப்படைகளிடம் தற்போதுள்ள துப்பாக்கிகளைவிட தொலைவில் உள்ள எதிரிகளை மிகத்துல்லியமாக தாக்குவதற்கு உதவும்.

**10.தொழில்முனைவை ஊக்கப்படுத்துவதற்காக, 'ஸ்வவலம்பன் எக்ஸ்பிரஸ்' இரயிலை இயக்கவுள்ள நிதி நிறுவனம் எது?**

**அ. இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி ☑**

ஆ. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

இ. தேசிய வீட்டுவசதி வங்கி

ஈ. இந்திய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி

- ❖ வளர்ந்துவரும் தொழில்முனைவோருக்காக வரும் ஜூன்.5 அன்று, 'ஸ்வவலம்பன் எக்ஸ்பிரஸ்' இரயிலை இயக்கவுள்ளதாக இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) தெரிவித்துள்ளது. இந்த 'ஸ்வவலம்பன் எக்ஸ்பிரஸ்' 15 நாட்களுக்கு 11 நகரங்கள் வழியாக சுமார் 7000 கி.மீ தொலைவுக்கு பயணிக்கும். இது, 'ஸ்வவலம்பன்' திட்டத்தின் ஒருபகுதியாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ், இளையோர் தமக்கென ஓர் எண்ணத்துடன் இரயிலில் ஏறுவார்கள், அவர்களுக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான கற்றல் பயிற்சிக்குப்பிறகு, பயனுள்ள வணிகத் திட்டத்துடன் அவர்கள் செல்வார்கள்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் பிரதமர் இளையோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- COVID–19 நோய்த்தொற்றுபற்றிய தகவல்களை அறியவும், அதுகுறித்த தகவல்களைத்தெரிவிக்கவும் உதவிமைய எண்களை மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 044–29510500 என்ற உதவி மைய எண்ணுக்கு தொடர்புகொண்டு கொரோனா வைரஸ் பற்றிய தகவல்களைத்தெரிவிக்கலாம்.

- புதிய தென்காசி மாவட்டத்தில், ₹2.70 கோடி மதிப்பில், 'வெள்ளாடு ஆராய்ச்சி மையம்' நிறுவப்படும் எனவும், சென்னைக்கு அருகேயுள்ள காட்டுப்பாக்கத்தில், ₹2.85 கோடி மதிப்பில், அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும் எனவும், தூத்துக்குடி மாவட்டத்தில், ₹1.70 கோடி மதிப்பில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவப்படும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.